25.06.2024

OS No: 73/2022

வா.சா 2 திரு. ராமசாமி (த/பெ . ஆதியப்பன்)

**குறுக்கு விசாரணை :**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு விபரங்களை நான் தான் சொன்னேன். எனக்கு 3 மகன்கள் கண்ணன், செந்தில் மற்றும் ரவி. எனது மூத்த மகன் கண்ணன் 1997ல் வெளிநாட்டிற்கு சென்றார். மூத்த மகனுக்கு எப்போது திருமணம் நடைப்பெற்றது என்று எனக்கு நினைவில்லை. எனக்கு வயது 86. மூத்த மகனின் மனைவி தான் இந்த தாவாவின் பிரதிவாதி. என்னுடைய மகள் பெயர் ஆனந்தி. ஆனந்திக்கு எப்போது திருமணம் செய்தோம் என்று நினைவில்லை. ஆனந்திக்கு மூத்த மகன் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பி அதன் மூலம் 30 பவுன் சீர் வரிசை கொடுத்து திருமணம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. 2வது மகனையும் மூத்த மகன் தான் பணம் கட்டி வெளிநாட்டிற்கு வேலைக்கு அழைத்து கொண்டார் என்று சொன்னால் சரி. தாவா சொத்து வாங்கியதற்கு பிறகு தான் மூத்த மகனுக்கு திருமணம் செய்து கொடுத்தேன். தாவா சொத்தை 2006ல் வாங்கினேன். தாவா சொத்தை வாங்கிய போது நான் மூத்த மகன், மருமகள் மற்ற மகன்களுடன் ஒன்றாக தான் வாழ்தோம். தாவா சொத்து வாங்கும் போது எனக்கு வயது 67 இருக்கும். தாவா சொத்தின் சர்வே எண் நம்பர் எனக்கு நினைவில்லை. தாவா சொத்தின் நான்குமால் எனக்கு தெரியும். தாவா சொத்து விஸ்தீரணம் 12 செண்ட். தாவா சொத்து 12 செண்டும் எனது மூத்த மகனும் 2வது மகனும் வெளிநாட்டில் இருந்து பணம் கொடுத்து ஒவ்வொருவருக்கும் 4 செண்ட் என ஒப்பு கொண்டு அவர்கள் பணத்தில் தான் வாங்கியது என்று சொன்னால் சரியல்ல. 2015ல் எனது மகன்கள் 3பேரும் ஆளுக்கு 4 செண்டு என பிரிந்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த அடிப்படையில் பிரதிவாதியின் கணவருக்கு கிடைத்த வடக்கு பக்கத்தில் பிரதிவாதியோ அவரது கணவரோ அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2017ல் பிரதிவாதி தான் மாட்டு கொட்டகை அந்த இடத்தில் போட்டார் என்றும் 2018ல் பிரதிவாதியின் கணவருக்கு கிடைத்த பாகத்திற்கு முகப்பில் கடைக்கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. 2018ல் அந்த கடைக்கு மின் இணைப்பு பிரதிவாதியின் பெயரில் தான் வாங்கினார் என்றால் சரி. 2017ல்

பிரதிவாதி தாவா சொத்தில் வடக்கு கூரை கொட்டகையை ஓட்டு கொட்டகையாக 2021ல் மாற்றினார் என்றால் நான் தான் ஓட்டு கொட்டகையாக மாற்றினேன். வாதி ராகவி 2வது மகனின் மனைவி. தாவா சொத்து வாங்குவதற்கு 6 மாதத்திற்கு முன்பாக வாதியின் கணவர் வெளிநாடு போனார். தாவா சொத்தை 72,000 க்கு கிரையம் வாங்கினேன். தற்போது தாவா சொத்து செண்ட் விலை ரூ. 20 முதல் 25 ஆயிரத்திற்கு விலை போகும். நான் பிரதிவாதியின் மீது என்னை அடித்து காரணத்தினால் போலீசில் புகார் கொடுத்தேன். சொத்து சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை . நான் கோயம்புத்தூருக்கு எந்த வருடம் போனேன் என்று எனக்கு தெரியாது.

( பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2024.06.25 17:11:06 +0530